

கரூர் திருமாநிலையூரில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் புதிய பேருந்து நிலையத்தில், நவீன தாழ் தள பேருந்துகளின் இயக்கத்தை கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமையில், கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் மேற்கு ஒன்றியம் கீரிப்பட்டி பேரூராட்சியில் நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் முகாமை பார்வையிட்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அப்போது மேற்கு ஒன்றிய செயலாளர் இரா.வரதராஜன், கிழக்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன், பேரூர் செயலாளர் காங்கமுத்து, மற்றும் மருத்துவர்கள் , செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம் - ஜெயங்கொண்டத்தில்

# நகர மற்றும் புறநகர் பேருந்து புதிய வழித்தட நீட்டிப்பு சேவை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், அக். 22-

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில் 05 நகர மற்றும் புறநகர் பேருந்து புதிய வழித்தட நீட்டிப்பு சேவையை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் ஜெயங்கொண்டத்தில்

போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

அதன்படி ஜெயங்கொண்டம் ஆயுதகளம் செல்லும் பேருந்து, ஜெயங்கொண்டத்திலிருந்து மாலை 7:50 மணிக்கு புறப்பட்டு சின்னவளையம் வழியாக ஆயுதகளம் சென்றடையும். மீண்டும் ஆயுதகளத்தில் 8:10 மணிக்கு புறப்பட்டு ஜெயங்கொண்டம் வந்தடையும் வகையில் இரண்டு நடைகள் இயக்கப்படுகிறது. மேலும் ஜெயங்கொண்டத்திலிருந்து சிலால், வாணதிரையன்பட்டினம், கீழமைக்கேல்பட்டி, தா.பழூர், காரைக்குறிச்சி வழியாக கும்பகோணம் வரை ஒரு நடை இயக்கப்படும் வகையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஜெயங்கொண்டம் அணைக்கரை செல்லும் பேருந்து, ஜெயங்கொண்டத்திலிருந்து மாலை 20.10 மணிக்கு புறப்பட்டு சிலால், அணைக்குடம் வழியாக அணைக்கரை சென்றடையும் வகையிலும், மீண்டும் 21:10 மணிக்கு அணைக்கரையிலிருந்து புறப்பட்டு ஜெயங்கொண்டம் வந்தடையும் வகையில் தினசரி 2 நடைகள் இயக்கும் வகையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஜெயங்கொண்டம் கும்பகோணம் செல்லும் பேருந்து, ஜெயங்கொண்டத்திலிருந்து மாலை 300 மணி மற்றும் 8:00 மணிக்கு முறையே புறப்பட்டு சிலால், உதயநத்தம், தேவாமங்கலம் வழியாக கும்பகோணம் சென்றடைந்து, மீண்டும் கும்பகோணத்தில் முறையே 4:40 மணி மற்றும் 9:40 மணிக்கு புறப்பட்டு ஜெயங்கொண்டம் வந்தடையும் வகையில் தினசரி 4 நான்கு நடைகள் இயக்கும் வகையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஜெயங்கொண்டம் கும்பகோணம் செல்லும் பேருந்து, ஜெயங்கொண்டத்திலிருந்து முறையே 06.10 மணி மற்றும் 6:45 மணிக்கு புறப்பட்டு சிலால், தா.பழூர், வாழைக்குறிச்சி, மதனத்தூர் வழியாக கும்பகோணம் சென்றடையும். மீண்டும் கும்பகோணத்திலிருந்து முறையே 07:30 மணி மற்றும் 20:30 மணிக்கு புறப்பட்டு ஜெயங்கொண்டம் வந்தடையும் வகையில் தினசரி 4 நான்கு நடைகள் இயக்கும் வகையிலும் துவக்கி வைக்கப்பட்டது.

ஜெயங்கொண்டம் சத்திரம் பேருந்து நிலையம் செல்லும் பேருந்து, ஜெயங்கொண்டத்தில் இருந்து சத்திரம் பேருந்து நிலையத்திற்கு காலை 7:55 மணிக்கு புறப்பட்டு உடையார்பாளையம், வி.கைகாட்டி, கீழப்பழூர், லால்குடி வழியாக சத்திரம் பேருந்து நிலையம் சென்றடையும். மீண்டும் சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து காலை 11.10 மணிக்கு புறப்பட்டு ஜெயங்கொண்டம் வந்தடையும் வண்ணம் தினசரி 2 நடைகள் இயக்கும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், கும்பகோணம் நிர்வாக இயக்குநர் தசரதன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழு) லிட், கடலூர் மண்டலம், பொது மேலாளர் எஸ்.பாண்டியன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் டி.சதீஸ்குமார், டிவிசனல் மேனேஜர் ராம்குமார், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா,

விருத்தாச்சலம் பணிமனை கிளை மேலாளர் ரவி, நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், திருச்சி மண்டல தலைவர் டி.சேகர், அரியலூர் தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், தொழிற்சங்க பிரதிநிதிகள், கொளஞ்சி, செல்வம், குமார், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### மன்னார்குடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மிசா.கு.பாலகிருஷ்ணனின்

# சகோதரி தனலட்சுமி அம்மையார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர்,அக்22-

மன்னார்குடி முன்னாள் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் மிசா.கு.பா.என்று அழைக்கப்படும் மிசா.கு.பாலகிருஷ்ணன் அவர்களின் சகோதரி தனலட்சுமி அம்மையார் (82) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த தனலட்சுமி அம்மையார் அவர்கள் மகாதேவபட்டணம் நினைவில் வாழும் நல்லாசிரியர் ஜெ.நடராஜன் அவர்களுடைய மனைவியும், இளவரசி ராஜ்குமார்,மணிமேகலை சேகர், என்.ராஜசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினருமான எம்.என்.பாரதி மோகன், கும்பகோணம் பரஸ்பர நிதி வங்கி மேலாளர் ஜெ.என்.சுகுமாரன், மன்னார்குடி நகர கூட்டுறவு வீட்டு வசதி வீட்டு வசதி சங்க அலுவலர் செ.என்.ராஜசோழன் ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார்.

தனலட்சுமி அம்மையாரின் மறைவின் தகவல் அறிந்த கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அம்மையாருக்கு அஞ்சலி செலுத்தினர். அம்மையாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு 21.10.2025 அன்று செவ்வாய் மாலை மகாதேவன்பட்டிணத்தில் நடைபெற்றது.

### கரூர் புதிய பேருந்து நிலையத்தில்

# 5 புதிய தாழ்தளப் பேருந்துகள்!

## முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர், அக்.22-

தங்கள் ஆட்சியில் எதுவும் செய்யாத அதிமுகவினர், கழக ஆட்சி திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். அதை பொருட்படுத்தாமல் கரூர் மாவட்டத்திற்கு தேவையான அரசு நலத்திட்டப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள் என வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கரூர் புதிய பேருந்து நிலையத்தில் அரசு போக்குவரத்து கழக கரூர் மண்டலம் சார்பில் 5 புதிய தாழ்தளப் பேருந்துகள் துவக்க விழா நடைபெற்றது. கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி புதிய பேருந்துகளை துவக்கி வைத்தார். பின்னர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகத்தின் கரூர் மண்டலம் சார்பாக புதியதாக பதிவு செய்த தாழ்தள நகரப் பேருந்துகளின் சேவையை (கரூர் கிளை சார்பாக) கரூர், குளித்தலை வழித்தடங்களில் 2 புதிய பேருந்துகள், கரூர் வேலூர் வழித்தடங்களில் 2 பேருந்துகள், கரூர் வாங்கல் 1 புதிய பேருந்தும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அதற்கான வழித்தடங்களில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த புதிய பேருந்துகள் மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயணிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கரூர் முத்தமிழறிஞர் கலைஞர் புதிய பேருந்து நிலையம் பல்வேறு சிறப்பம்சங்களுடன், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அடிக்கல் நாட்டப்பட்டு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்கள் மிகசிறப்பாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். எந்த போக்குவரத்து நெரிசல் இல்லாமல், கரூர் மக்கள் வியந்து பார்க்கக்கூடிய அளவிற்கு மிக பிரம்மாண்டமாக அனைத்து வசதிகளும் கூடிய, சிறப்பம்சங்களுடன் ரூ.40 கோடியில் புதிய பேருந்து நிலையம் வடிவமைக்கப்பட்டு துணை முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இன்னும் தேவைப்படுகிற புதிய வசதிகளும் மேற்கொள்ளப்படும். முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் எங்களது நன்றியை கரூர் மாவட்ட மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் இடையே 24 மணி நேரமும் நகர பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சேலம், ஈரோடு. கோவை, திருப்பூர், தாராபுரம், பொள்ளாச்சி மார்க்கத்தில் செல்லும் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு, கரூர் பழைய பேருந்து நிலையத்திற்குச் சென்று, அங்கிருந்து செல்ல வேண்டிய பகுதிகளுக்கு இயக்கப்படுகின்றன.

ஏற்கனவே மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் பேருந்துகள் அப்படியே இயக்கப்படுகின்றன.

புதிய பேருந்து நிலையம் என்பது கரூர் மாநகரத்தினுடைய மையப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் மிக அதிகமாக இருக்கிறது. புறநகரில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்பது மக்களின் நீண்ட கால கோரிக்கை. முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் கண்டு கொள்ளவில்லை. எனினும்

அந்தக் கோரிக்கையை ஏற்று 2021 சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியாக வழங்கி, வெற்றி பெற்றதும் முதல் ஆண்டிலேயே ரூ. 40 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கினார்கள். சிலர் தாங்கள் ஆட்சியில் இருக்கும் போது எதையும் செய்யாமல் நயவஞ்சகத்தோடு கழக ஆட்சியின் திட்டங்களையும் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கோர்ட்டுக்கு சென்று தடுத்தனர். உச்சநீதி மன்றம் வரை சென்று வாதாடி, புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மக்கள் நலனில் அக்கறை இல்லாமல், மக்களுக்கு எந்த நன்மை கிடைத்துவிடக்கூடாது என்கிற குறுகிய மனப்பான்மையுடன் இருப்பவர்கள் தங்கள் ஆட்சியில் எந்த திட்டத்தையும் செயல்படுத்தாமல் கழக ஆட்சி அமைந்த பின்னரும் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைத்துவிடக்கூடாது என தடை ஏற்படுத்தி வருகின்றனர். அவர்கள் எண்ணம் நிறைவேறாது.

போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்காக கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் மாவட்ட நூலகம் கட்டப்பட்டு வருகிறது. இதற்கும் கோர்ட்டுக்கு சென்று தடை போட்டார்கள். அரசு வழக்கறிஞர் வாதாடி தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இப்படி நீதிமன்றத்திற்கு சென்று வாதாடி போராடி திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் பொருட்படுத்தாமல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடர்ந்து இன்னும் தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டங்கள் கரூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

இவ்வாறு செந்தில் பாலாஜி கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி ஆணையர் சுதா, துணை மேயர் ப.சரவணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கரூர் மாவட்ட துணை மேலாளர் சாமிநாதன், மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் எஸ்பி. கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.


# விளாத்திகுளத்தில் புதிய கட்டடம் திறப்பு!

தூத்துக்குடி, அக்.22–

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,பூசனூர் ஊராட்சி, வடமலைசமுத்திரம் கிராமத்தில் அங்கன்வாடி மைய கட்டிடம், கட்டுவதற்கும், பூசனூர் ஊராட்சியில் பேவர் பிளாக் சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பணியையும் ரூ.94.76லட்சம் மதிப்பீட்டில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், அன்புராஜன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடலூர் இரெ. இளம்வழுதி
### அக்டோபர் 22 (1970)



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிடர் கழக மாணவர் அமைப்புக்கு செயலாளராக இருந்தவர்.

தி.மு.க. தொடங்கிய நாளிலிருந்து பல்வேறு பொறுப்புகளில் செயல்பட்டவர்.

‘பொன்மொழி’ என்ற கழக இதழை தனது இறுதி காலத்தில் தொடங்கி நடத்தினார்.

தலைசிறந்த வழக்கறிஞராக, தலைமைக் கழகப் பேச்சாளராக விளங்கினார்.

1967ல் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அறிஞர் அண்ணாவால் ‘கறுப்பு இளவரசர்’ என அழைக்கப்பட்ட இவர், தலைவர் கலைஞரின் ஆருயிர் நண்பர். இறுதி மூச்சு வரை, இயக்கப் பணியாற்றிய பகுத்தறிவு பண்பாளர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.ஆர்.பி.சீனிவாசன்
### அக்டோபர் 22 (2022)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக பணியாற்றியவர்.

நம்பரை ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.